

**11.04.2021**




## போட்டித் தேர்வுகளுக்கு மாணவ, மாணவியர்கள் தொடர்ந்து தயாராவீர் !

# ஆயக்குடி மரத்தடி இலவச பயிற்சி மையம்

## வேண்டுகோள்!!

**வாரந்தோறும் ஞாயிறு காலை 10.00 மணி முதல் மாலை 5.00 மணி வரை பயிற்சி வகுப்புகள் நடைபெறும்.**

**பயிற்சி கட்டணம் : லஞ்சம் வாங்க மாட்டேன் என்ற உறுதிமொழி மட்டும்**

**இந்த வாரத்திற்கான (11.04.2021) (PDF) வழங்கியவர்,**
**சிவகங்கை கல்வித்துறையில் பணி புரியும் நமது மாணவி**
திருமதி. **S.மெஹர் பானு** அவர்களுக்கு
**ஆயக்குடி மரத்தடி இலவச பயிற்சி மையத்தின்**
சார்பாக நன்றிகளை தெரிவித்துக்கொள்கிறோம்.

இவண்,

# ஆயக்குடி மரத்தடி இலவச பயிற்சி மையம்

**இடம் : நந்தவன மரத்தடி, புதிய காவல்நிலையம், பழையஆயக்குடி.**

**பஸ் நிறுத்தம் : ஆயக்குடி கோச்சிங் சென்டர், புதிய காவல்நிலையம், பழையஆயக்குடி**

குறிப்பு : **திறனறிவு, நடப்பு நிகழ்வுகள், அரசியல், வரலாறு, புவியியல், தமிழர் பண்பாடு ஆகிய பகுதிகளுக்கு எப்போதும் முக்கியத்துவம் கொடுத்துக்கொண்டே இருங்கள் !**
**160/200 Over ... வெற்றி உறுதி !**

அனைவரும் கண்டிப்பாக **முகக்கவசம்** (MASK) அணிந்து வரவும்.

## நடப்பு நிகழ்வுகள்

1. உச்சநீதிமன்றத்தின் தலைமை நீதிபதியாக நியமிக்கப்பட்டுள்ள N.V.ரமணா எத்தனையாவது நீதிபதி?
   a) 46 b) 47 **c) 48** d) 49
2. 2019-ஆம் ஆண்டிற்கான தாதா சாகேப் பால்கே விருது பெற்றவர்?
   a) அமிதாபச்சான் **b) ரஜினி காந்த்** c) சிவாஜி d) பாலச்சந்தர்
3. மியாமி ஓபன் டென்னிஸ் 2021 போட்டியில் ஆடவர் ஒற்றையர் பிரிவில் பட்டம் வென்ற ஹியூபர்ட் ஹர்காக்ஸ் எந்த நாட்டைச் சேர்ந்தவர்?
   **a) போலந்து** b) இத்தாலி c) ஆஸ்திரேலியா d) ஜப்பான்
4. மியாமி ஓபன் டென்னிஸ் 2021 போட்டியில் மகளிர் ஒற்றையர் பிரிவில் பட்டம் வென்ற ஆஷ்லி பார்ட்டி எந்த நாட்டைச் சேர்ந்தவர்?
   a) அமெரிக்கா b) கனடா **c) ஆஸ்திரேலியா** d) இந்தியா
5. ஒருநாள் கிரிக்கெட் போட்டியில் தொடர்ந்து 22 வெற்றிகளை பெற்று உலக சாதனை புரிந்த அணி?
   a) நியூசிலாந்து **b) ஆஸ்திரேலியா**
   c) இந்தியா d) இங்கிலாந்து
6. இந்தியாவில் அரசியல் கட்சி வேட்பாளர்களின் தேர்தல் செலவை அரசாங்கமே ஏற்றுக்கொள்ள வேண்டும் என பரிந்துரை செய்த குழு?
   a) T.N. சேஷன் **b) இந்திரஜித் குப்தா**
   c) லிங்டோ d) பிரசாந்த் கிஷோர்
7. மத்திய தரைகடலையும், செங்கடலையும் இணைக்கும் சூயஸ் கால்வாயின் அளவு?
   **a) 163 கி.மீ. நீளம் மற்றும் 300 மீ அகலம் கொண்டது**
   b) 150 கி.மீ. நீளம் மற்றும் 150 மீ அகலம் கொண்டது
   c) 173 கி.மீ. நீளம் மற்றும் 300 மீ அகலம் கொண்டது
   d) எதுவும் இல்லை
8. பாண்டிச்சேரியில் நடைபெறுவது எத்தனையாவது சட்டசபை தேர்தல்(2021) ?
   a) 14 **b) 15** c) 16 d) 17
9. தமிழக சட்டசபை தேர்தலில் (2021) அதிக வேட்பாளர்கள் போட்டியிடும் தொகுதி எது?
   **a) கரூர்** b) சோழியங்கநல்லூர்
   c) துறைமுகம் d) கொளத்தூர்
10. சரியான கூற்று எது?
    1. திரைப்படத்துறையில் வாழ்நாள் சாதனை புரிந்தவருக்கு ஆண்டுதோறும் மத்திய அரசால் தாதா சாகேப் பால்கே விருது 1969-ஆம் ஆண்டு முதல் வழங்கப்பட்டு வருகிறது.
    2. தாதா சாகேப் பால்கே விருதை முதன் முதலில் பெற்றவர் நடிகை தேவிகாராணி.
    3. தமிழகத்தில் தாதா சாகேப் பால்கே விருது பெற்றவர்கள் சிவாஜிகணேசன் (1996), பாலச்சந்தர் (2010), ரஜினிகாந்த்(2019)
    4. இந்த விருது வென்றவர்களுக்கு தங்கத்தாமரை பதக்கம், பொன்னாடை, ரூ.10 இலட்சம் பரிசு வழங்கப்படுகிறது.
    a) 1, 2, 3 b) 2, 3, 4 c) 1, 3, 4 **d) அனைத்தும்**
11. உயர் வளிமண்டல பரப்பில் நிலவும் காற்று மற்றும் பிளாஸ்மா அயனிகள் தொடர்பான ஆய்வுக்காக **“சவுண்டிங் ராக்கெட்டை”** வெற்றிக்கரமாக ஏவிய நாடு?
    **a) இந்தியா** b) அமெரிக்கா c) ரஷ்யா d) சீனா
12. சரியான கூற்று எது?
    1. 15-வது நிதிக்குழுவை குடியரசுத்தலைவர் அமைத்த ஆண்டு - 2017
    2. 15-வது நிதிக்குழுவின் தலைவர் - N.K.சிங்
    3. 15-வது நிதிக்குழுவின் காலம் - 01.04.2021 - 31.03.2026
    4. 15-வது நிதிக்குழு தனது அறிக்கையை சமர்ப்பித்த நாள் : பிப்ரவரி-01-2021
    a) 1, 2, 3 b) 2, 3, 4 c) 1, 3, 4 **d) அனைத்தும்**

# <u>வரலாறு</u>

1. கீழ்க்கண்டவற்றுள் சரியானதை தேர்வு செய்க?
   1. ரௌலட் சட்டம் கொண்டு வரப்பட்டதே ஒத்துழையாமை இயக்கம் துவங்க உடனடி காரணமாக அமைந்தது.
   2. நான் ஒரு தொலைநோக்குடையவன் அல்ல, ஒரு நடைமுறை கருத்தியல் கொண்டவன் எனக்கூறியவர்-காந்தி
   3. இல்பர்ட் மசோதா எதிர்ப்புப் போராட்டம் அனைத்திந்திய தேசிய மாநாடு (All India National Conference) உருவாக காரணமாக அமைந்தது
   4. 1813-ல் கொண்டு வரப்பட்ட பட்டயச் சட்டம் இந்தியாவில் கிறிஸ்த்துவ சமயப் பரப்பாளர்கள் தங்கள் சமயப் பணியினை மேற்கொள்ள அனுமதித்தது

   a. 1, 2, 3 b. 2, 3, 4 c. 1, 3, 4 **<u>d. அனைத்தும்</u>**

2. காங்கிரஸ் துவங்கப்படுவதற்கு முன்பு ஆரம்பிக்கப்பட்ட அமைப்புகளை காலவரிசைப்படி தேர்வு செய்க?
   1. பாம்பே பிரசிடென்சி அசோசியேசன் 2. மெட்ராஸ் மகாஜனசபை
   3. பூனா சர்வஜன சபை 4. கிழக்கிந்திய அமைப்பு (East Indian Association)

   a. 1, 2, 3, 4 b. 2, 4, 1, 3 **<u>c. 4, 3, 2, 1</u>** d. 1, 4, 2, 3

3. பின்வருவனவற்றுள் சரியான குறியீட்டை தேர்வு செய்க?
   1. 1905-ல் வங்கப்பிரிவினையின் போது தீவிரவாதிகளும், மிதவாதிகளும் ஒருவருக்கொருவர் ஒத்துழைப்பு வழங்கினர்
   2. வங்கப்பிரிவினையின் போது வினாயகர் திருவிழா மற்றும் சிவாஜி திருவிழாவை திலகர் நடத்தினார்
   3. வங்கப்பிரிவினை போது அமர் சோனாபிங்களா என்ற பாடலை தாகூர் இயற்றினார்
   4. வங்காளத்தின் ஒற்றுமையை பறைசாற்றும் விதமாக பெடரேசன் ஹாலுக்கு அடிக்கல் நாட்டியவர்-தாகூர்

   a. 1, 2, 3, 4 b. 2, 3, 4 c. 1, 2, 4 **<u>d. 1, 3 ,4</u>**

4. கீழ்க்கண்டவற்றுள் தவறானது எது?
   **<u>a.அலிகார் முஸ்லிம் இயக்கம் மேற்கத்திய கல்வி முறையில் புறக்கணித்தது</u>**
   b. பெண் கல்விக்காக பனாரஸில் பெதூன் பள்ளியை துவக்கியவர் - ஈஸ்வர சந்திர வித்யாசாகர்
   c.ஹரார் இயக்கம் (Aharar Movement) பிரிட்டிஷ் அரசிற்கு விசுவாசமாக இருந்தது. இதனை துவக்கியவர் - அபுல்கலாம் ஆசாத்
   d. தத்துவ போதினி சாலை தேவந்திரநாத் தாகூரால் துவங்கப்பட்டது

5. 1935 இந்திய அரசுச்சட்டத்தில் இடம்பெறாதது எது?
   a.அனைத்திந்திய கூட்டாட்சி b. பொறுப்பான அரசாங்கம்
   **<u>c. டொமினியன் அந்தஸ்து</u>** d. மாகாண சுயாட்சி

6. கிரிப்ஸ் தூதுக்குழு பற்றிய கூற்றுகளில் சரியானது எது?
   1. இந்தியாவிற்கு டொமினியன் அந்தஸ்து வழங்க உறுதியளித்தது
   2. இக்குழுவில் இடம்பெற்ற ஒரேயொரு இந்திய பிரதிநிதி சத்யேந்திரநாத் சில்தா
   3. இந்தியர்கள் மட்டும் அடங்கிய பிரதிநிதிகள் கவுன்சில் அமைப்பு
   4. இந்திய பிரிவினைக்கு பரிந்துரைத வழங்கியது

   a.1, 2, 3 **<u>b. 1, 3, 4</u>** c. 1, 2, 4 d. அனைத்தும்

7. 1942-ல் வெள்ளையனே வெளியேறு இயக்கம் தீர்மானத்தை எதிர்த்து காங்கிரஸிலிருந்து விலகிய காங்கிரஸ் தலைவர்கள் யார்?
   1. பூலாபாய் தேசாய் 2. சுபாஸ் சந்திரபோஸ் 3. சி.ராஜாஜி 4. சத்தியமூர்த்தி

   **<u>a.1, 3</u>** b. 1, 4 c. 2, 3 d. அனைத்தும்

8. சரியான குறியீட்டைத் தேர்வு செய்க?
   1. 1907-ல் சூரத் காங்கிரஸ் மாநாட்டிற்கு தலைமை தாங்கியவர் ராஷ்பிகாரிகோஷ்
   2. 1917, ஏப்ரல் 10-ல் நடைபெற்ற சம்பரான் சத்தியாகிரகத்தில் காந்தியுடன் பங்கெடுத்த தலைவர்கள் ராஜேந்திரபிரசாத், பிரஜ்கிஷோர் பிரசாத் மற்றும் ஆச்சாரிய கிருபாலானி ஆவர்
   3. 1931-ல் நடைபெற்ற INC மாநாட்டில் இரண்டாவது வட்டமேசை மாநாட்டில் பங்கேற்க ஒப்புதல் வழங்கப்பட்டது. அடிப்படை உரிமைகள் மற்றும் பொருளாதாரக் கொள்கை தீர்மானம் நிறைவேற்றப்பட்டது

   **<u>a.1, 2, 3</u>** b. 2, 3, 4 c. 1, 3 ,4 d. அனைத்தும்

9. கீழ்க்கண்டவற்றுள் சரியானதை தேர்வு செய்க?
   1. டெல்லி சாந்தினி சௌக் பகுநிலை 1912-ல் வைசிராய் ஹார்டிஞ்சு பிரபு மீது வெடிகுண்டு வீசியதற்கு மூளையாக செயல்பட்டவர் - ராஷ்பிகாரி போஸ்
   2. 1909-ல் கர்சன் வில்லியை கொலை செய்தவர் - மதன்லால் திங்ரா
   3. இந்திய இளைஞர்களை மனிதாபிமானமற்ற முறையில் நாடு கடத்தியதற்காகவும், தூக்கிலிட்டதற்காகவும் கர்சன் வில்லி கொலை செய்யப்பட்டார்

   a.1, 2 சரி b. 2, 3 சரி c. 1, 3 சரி **<u>d. அனைத்தும்</u>**

10. தவறான இணையைத் தேர்வு செய்க?
1. முதல் மைசூர் போர் - மங்களூர் உடன்படிக்கை
2. இரண்டாம் மைசூர் போர் - மதராஸ் உடன்படிக்கை
3. மூன்றாவது மைசூர் போர் - ஸ்ரீரங்கபட்டிணம் உடன்படிக்கை
4. நான்காவது மைசூர் போர் - துணைப்படைத்திட்டம் உருவாக்கம்
**a. 1, 2** b. 2, 3 c. 1, 3 d. 3, 4

11. கீழ்க்கண்டவற்றுள் தவறானது எது?
1. அனுசீலன் சமிததி ஜதீந்திரநாத் போஸ் என்பவரால் கல்கத்தாவில் துவக்கப்பட்டது
2. சந்தியா என்ற செய்தித்தாள் புரட்சிகர பயங்கரவாதத்திற்கு ஆதரவாக கருத்துக்களை பரப்பியது
3. பாரத மாதா சங்கத்தை தோற்றுவித்தவர் வீரேந்திரநாத் பட்டோபாத்யாயா
a. 1, 3 b. 2, 3 **c. எதுவுமில்லை** d. அனைத்தும்

12. பொருத்துக
A. சுத்தி இயக்கம் - 1. கான் அப்துல் கபார்கான்
B. இந்தியரின் தேசப்பற்று துறவி - 2. டி.கே.கார்வே
C. செஞ்சட்டை இயக்கம் - 3. சுவாமி விவேகானந்தர்
D. இந்து விதவைகள் சங்கம் - 4. தயானந்த சரஸ்வதி

| | A | B | C | D |
|---|---|---|---|---|
| a | 1 | 2 | 3 | 4 |
| b | 2 | 3 | 4 | 1 |
| **c** | **4** | **3** | **1** | **2** |
| d | 3 | 1 | 2 | 4 |

13. சரியாக பொருந்தியுள்ளது எது?
a. W.C.பானர்ஜி - சுதேசமித்ரன் **b. G.சுப்பிரமணிய ஐயர் - தி ஹிந்து**
c. லாலா லஜபதிராய் - கேசரி d. லட்சுமிநரசுசெட்டி - சமாச்சார் தர்பால்

14. கீழ்க்கண்டவற்றுள் சரியானதை தேர்வு செய்க?
1. சௌரி சௌரா நிகழ்வு ஒத்துழையாமை இயக்கம் முடிவுக்குவர காரணமாக அமைந்தது
2. ஹரிஜன் என்ற வார்த்தையை முதன்முதலில் 1942-ல் காந்தி பயன்படுத்தினார்
3. சௌரி சௌரா சம்பவத்தை விசாரணை செய்ய அமைக்க கமிட்டி - ஹண்டர் கமிட்டி
4. பொதுமக்கள் பாதுகாப்பு மசோதாவை மத்திய சட்டமன்றத்தில் நிறைவேற்ற எதிர்ப்பு தெரிவித்து பகத்சிங் மற்றும் பி.கே.தத் ஆகியோர் வெடிகுண்டு வீசினர்
**a. 1, 4** b. 1, 2 c. 2, 4 d. 2, 3

15. கீழ்க்கண்டவற்றுள் காந்தி-இர்வின்-ஒப்பந்தத்துடன் தொடர்பில்லாத செய்தி எது?
a. உப்புச்சட்டத்தை நடைமுறையிலிருந்து நீக்குவது
b. தீவிரவாத செயல்களில் ஈடுபட்டவர்களைத் தவிர அனைத்து அரசியல் கைதிகளையும் விடுதலை செய்வது
c. சட்டமறுப்பு இயக்கத்தைக் கைவிடுவது
**d. மத்திய மற்றும் மாகாணம் ஆகிய இருவகை சட்டமன்றங்களை உருவாக்குவது**

16. பின்வரும் நிகழ்வுகளை காலவரிசைப்படி அமைத்திடுக?
1. வகுப்புவாரி பிரதிநிதித்துவம் 2. சைமன் குழு
3. முதல்வட்டமேசை மாநாடு 4. காந்தி இர்வின் ஒப்பந்தம்
a. 1, 2, 3 ,4 b. 2, 1, 3, 4 **c. 2, 3, 4, 1** d. 2, 3, 1, 4

17. கீழ்க்கண்ட நிகழ்வுகளில் சரியாக பொருந்தியுள்ளது எது?
1. சிம்லா மாநாடு - வேவல் பிரவு 2. மாப்ளா கலகம் - ரீடிங் பிரபு
3, வகுப்புவாத பிரதிநிதித்துவம் - வெல்லிங்டன் பிரபு 4. பாகிஸ்தான் கோரிக்கை-லின்லித்கோ பிரபு
a.1. 3 b. 2, 3 ,4 c. 1, 2, 3 **d. அனைத்தும்**

18. ரௌலட் சட்டம் இயற்றப்பட்டபோது வைசிராயாக இருந்தவர் யார்?
a.ஹார்டிஞ்சு பிரபு-II **b. செம்ஸ்போர்டு பிரபு**
c. ரீடிங் பிரபு d. மிண்டோ-II

19. கீழ்க்கண்டவற்றுள் சரியானது எது?
1. உப்பு வரியை நீக்குவதே காந்தியின் உப்புச் சத்தியாக்கிரகத்தின் இறுதியான நோக்கமாகும்
2. கிரிப்ஸ் தூதுக்குழுவின் திட்டம் தோல்வியடைந்ததால் கால்பிரஸ் வெள்ளையனே வெளியேறு இயக்கத்தை துவக்கியது
3. செப்டம்பர் 2, 1946-ல் இடைக்கால அரசாங்கம் அமைக்க கேபினெட் தூதுக்குழுத் திட்டம் வழிவகுத்தது
4. 1946 இடைக்கால அரசில் உள்துறை அமைச்சராக பதவி வகித்தவர் - லியாகத் அலிகான்
a.1, 2, 3 **b. 2, 3** c. 1, 4 d. அனைத்தும்

20. கீழ்க்கண்டவற்றுள் சரியானது எது?
1. தமிழர்களே இந்திய விடுதலைக்கு முன்னோடி எனக்கூறியவர் - என்.சஞ்சீவ்
2. ராஜாஜியின் C.R. திட்டத்தின் நோக்கம் முஸ்லிம்களுக்கு தனிநாடு வழங்குவதாகும்
3. திருச்சி பிரகடனம் வெளியிடப்பட்டது 1801
4. தமிழ்நாட்டில் முதல் தனிநபர் சத்தியாகிரகி - டி.எஸ்.எஸ்.ராஜன்
a.2, 3 b. 1, 3, 4 c. 1, 2, 4 **d. அனைத்தும்**

# <u>அரசியல்</u>

1. கீழ்க்கண்ட கூற்றுகளில் தவறானது எது?
பணமசோதா மீது மாநிலங்களவையானது
1. நிராகரிக்க முடியும் 2. பரிந்துரைகள் வழங்கலாம் 3. நிராகரிக்க முடியாது
4. 14 நாட்களுக்குள் திருப்பியனுப்ப வேண்டும் 5. திருத்தம் செய்யலாம்
a. 1, 2, 3 b. 2, 4 **<u>c. 1, 5</u>** d. 3, 4, 5

2. பட்ஜெட் தாக்கல் செய்யும்போது அதனுடன் சமர்ப்பிக்க வேண்டிய ஆவணங்கள் எது?
1. பட்ஜெட் தொடர்பான விளக்கங்கள் 2. மானியக் கோரிக்கைகளின் சுருக்கம்
3. ஒதுக்கீட்டு மசோதா 4. நிதி மசோதா 5. பொருளாதார கணக்கீடு
a. 1, 3, 5 b. 2, 3, 5 c. 2, 3, 4, 5 **<u>d. 1, 2, 3, 4</u>**

3. மாவட்ட நீதிபதிகளை நியமிப்பவர்?
a. உயர்நீதிமன்ற நீதிபதி b. மாநில பணியாளர் தேர்வாணையம்
c. முதலமைச்சர் **<u>d. ஆளுநர்</u>**

4. பொருத்துக
A. 3-வது அட்டவணை - 1. மேலவையில் உறுப்பினர்களுக்கு ஒதுக்கீடு
B. 9-வது அட்டவணை - 2. கட்சித்தாவல் தடைச்சட்டம்
C. 4-வது அட்டவணை - 3. சில குறிப்பிட்ட சட்ட மதிப்பீடுகள்
D. 10-வது அட்டவணை - 4. மொழிகள்
- 5. உறுதிமொழிகள்

| | A | B | C | D |
|---|---|---|---|---|
| a | 1 | 4 | 2 | 3 |
| b | 5 | 4 | 2 | 1 |
| **<u>c</u>** | **<u>5</u>** | **<u>3</u>** | **<u>1</u>** | **<u>2</u>** |
| d | 4 | 2 | 1 | 3 |

5. அதிரடி பொது முக்கியத்துவம் வாய்ந்த விஷயங்களில் அனைத்து அமைச்சர்களின் கவனத்தை ஈர்க்க கொண்டு வரப்படும் தீர்மானம்?
a.அரைமணி நேர விவாதம் **<u>b. கவன ஈர்ப்பு விவாதம்</u>**
c. குறுகிய நேர விவாதம் d. ஒத்தி வைப்பு விவாதம்

6. கீழ்க்கண்டவற்றுள் இந்திய குடிமக்களுக்கு மட்டும் கிடைக்கப்பெறும் ஆனால் வெளிநாட்டவருக்கு கிடைக்கப்பெறாத அடிப்படை உரிமை எது?
a.சட்டத்தின் முன் அனைவரும் சமம்
b. கட்டாய ஆரம்ப கல்வி பெறும் உரிமை
c. சமய விவகாரங்களை நிருவகிக்கும் உரிமை
**<u>d. கல்வி நிறுவனங்களை நிறுவி நிர்வகிக்கும் சிறுபான்மையினருக்கான உரிமை</u>**

7. பொருத்துக
A. பல்வந்த்ராய் மேத்தாகுழு - 1. 1978
B. சமுதாய வளர்ச்சித்திட்டம் - 2. 1957
C. அசோக் மேத்த கமிட்டி - 3. 1952
D. 73-வது அரசியலமைப்பு திருத்தம் - 4. 1992

| | A | B | C | D |
|---|---|---|---|---|
| **<u>a</u>** | **<u>2</u>** | **<u>3</u>** | **<u>1</u>** | **<u>4</u>** |
| b | 1 | 2 | 4 | 3 |
| c | 3 | 1 | 4 | 2 |
| d | 4 | 3 | 2 | 1 |

8. கீழ்க்கண்டவற்றுள் 91-வது அரசியலமைப்புச் சட்ட திருத்தத்தில் (2003) இடம்பெறாதது எது?
a. பிரதமரை உள்ளடக்கிய அமைச்சரவையானது, லோக் சபை உறுப்பினர்களின் எண்ணிக்கையில் 15%க்கு மிகக்கூடாது
b. தகுதி நீக்கம் செய்யப்பட்ட உறுப்பினரை அமைச்சராக நியமிக்கக் கூடாது
c. தகுதி நீக்கம் செய்யப்பட்ட உறுப்பினர் அனைத்து விதமான அரசியலமைப்புகளிலிருந்தும் நீக்கப்பட வேண்டும்
**<u>d. தகுதி நீக்கம் செய்யப்பட்ட உறுப்பினர் எதிர்காலத்தில் எந்தவொரு தொகுதியிலும் போட்டியிடக் கூடாது</u>**

9. பணமசோதாவைப் பொறுத்து தவறானது எது?
a. லோக்சபாவில் மட்டுமே அறிமுகப்படுத்த இயலும்
b. ஒரு மசோதா பணமசோதா என்பதை தீர்வு செய்பவர் சபாநாயகர்
**<u>c. சபாநாயகர் குடியரசுத் தலைவரின் அனுமதியின்றி அறிமுகப்படுத்த இயலும்</u>**
d. பணமசோதாவை சட்டமாக்க இருஅவைகளின் கூட்டமர்வு கூடட இயலாது

10. கீழ்க்கண்டவற்றுள் எது இந்திய தேர்தல் ஆணையத்தின் பணி அல்ல?
**<u>a. பஞ்சாயத்து தேர்தலை மேற்பார்வையிடுதல்</u>**
b. வாக்காளர் பட்டியலை தயாரித்தல்
c. வாக்குச்சாவடிகளை அமைத்தல்
d. தேர்தல் நடத்தை வழிமுறைகளை அறிவித்து, செயல்படுத்துதல்

11. பொருத்துக

A. ஆட்கொணர்வு நீதிப்பேராணை - 1. நிர்வாக அதிகாரிக்கு எதிராக பிரயோகிக்க இயலாது
B. தடைநிறுத்தும் நீதிப்பேராணை - 2. அமைச்சருக்கு எதிராக பயன்படுத்த இயலாது
C. நெறிமுறை உறுத்தல் நீதிப்பேராணை - 3. முன்பின் அறிந்திராதவர்கள் (அ) சமூக ஆர்வலர்கள் பயன்படுத்துதல்
D. தகுதிமுறை வினா நீதிப்பேராணை - 4. சட்டமியற்றும் அமைப்புகள், தனிநபர்களுக்கு எதிராக உபயோகிக்க இயலாது

| | A | B | C | D |
|---|---|---|---|---|
| **<u>a</u>** | **<u>3</u>** | **<u>1</u>** | **<u>4</u>** | **<u>2</u>** |
| b | 1 | 2 | 3 | 4 |
| c | 4 | 3 | 2 | 1 |
| d | 2 | 4 | 1 | 3 |

12. கீழ்க்கண்டவற்றுள் லோக் சபை சபாநாயகர் பதவிநீக்கம் செய்தவற்கான தீர்மானம் குறித்து சரியானது எது?
1. தீர்மானம் கொண்டுவரப்படும் முன் 14 நாட்களுக்கு முன்னதாக நோட்டீஸ் அளிக்கப்பட வேண்டும்
2. அவையின் மொத்த உறுப்பினர்கள் வாக்களிப்பில் அதிகப்படியான உறுப்பினர்கள் மூலமே நிறைவேற்ற முடியும்
3. தீர்மானம் நிறைவேற அவையின் மொத்த உறுப்பினர்களின் எண்ணிக்கையில் பாதிக்கு மேலும் மற்றும் வாக்களிக்கும் உறுப்பினர்களில் 2/3 பங்குக்கு மேலாக இருக்க வேண்டும்

a. 1 மட்டும் b. 2 மட்டும் **<u>c. 1, 2</u>** d. 2, 3

13. பின்வருவனவற்றுள் எந்தவொன்று தேசிய நெருக்கடி நிலையை பிரகடனப்படுத்த போதுமான காரணமாக கருத்தப்பட இயலாது?

a.போர் b. வெளிநாட்டு ஆக்கிரமிப்பு c. ஆயுதக்கலவரம் **<u>d. உள்நாட்டுக்குழப்பம்</u>**

14. பொருத்துக

A. மத்திய புலனாய்வு அமைப்பு - 1. 1985
B. நிர்வாகத் தீர்ப்பாயச் சட்டம் - 2. 1957
C. மொழி சிறுபான்மையினருக்கான சிறப்பு அலுவலர் - 3. 1963
D. மத்திய கண்காணிப்பு ஆணையம் - 4. 1964

| | A | B | C | D |
|---|---|---|---|---|
| a | 4 | 3 | 2 | 1 |
| **<u>b</u>** | **<u>3</u>** | **<u>2</u>** | **<u>1</u>** | **<u>4</u>** |
| c | 2 | 4 | 1 | 3 |
| d | 1 | 2 | 3 | 4 |

15. தேசிய மனித உரிமைகள் ஆணையைப் பற்றிய கூற்றுகளில் சரியானது எது?
1. இதன் தலைவர் கட்டாயமாக ஓய்வு பெற்ற இந்தியத் தலைமை நீதிபதியாக இருக்கவேண்டும்
2. மாநில மனித உரிமை ஆணையம் ஒவ்வொரு மாநிலத்திலும் அமைக்கப்படும்
3. இயல்பில் இதன் அதிகாரம் பரிந்துரைக்கும் தன்மை மட்டுமே கொண்டது
4. ஆணையத்தில் பெண் உறுப்பினர் நியமிக்கப்படுவது கட்டாயமாகும்

a. 2, 4 b. 1, 3 c. 2, 3 **d. அனைத்தும்**

16. பொருத்துக

A. ஷரத்து 343 - 1. மாநிலங்களின் அலுவல் மொழி
B. ஷரத்து 345 - 2. மத்திய அரசு அலுவலப் பயன்பாட்டு மொழி
C. ஷரத்து 348 - 3. குற்றதீர்ப்பு ஆணையங்களின் பயன்பாட்டு மொழி
D. ஷரத்து 350 - 4. உச்சநீதிமன்ற, உயர்நீதிமன்ற அலுவல் மொழி

| | A | B | C | D |
|---|---|---|---|---|
| a | 1 | 2 | 3 | 4 |
| b | 4 | 3 | 2 | 1 |
| **<u>c</u>** | **<u>2</u>** | **<u>1</u>** | **<u>4</u>** | **<u>3</u>** |
| d | 3 | 4 | 1 | 2 |

17. குடியரசுத் தலைவரின்அதிகாரங்களில் அல்லாதது எது?
a. முப்படைகளின் தலைவர்
b. மத்திய அரசின் முக்கிய நியமனங்களை மேற்கொள்வது
**<u>c. பாராளுமன்ற ஒப்புதலுக்காக வரவு செலவு அறிக்கையை சமர்ப்பிப்பது</u>**
d. போர் மற்றும் அமைதிக்கான அறிவிப்பை மேற்கொள்வது

18. துணை குடியரசுத்தலைவரை பதவி நீக்கம் செய்ய தீர்மானம் எங்கு கொண்டு வரலாம்?

a.பாராளுமன்றத்தின் ஏதேனும் ஒரு அவை b. பாராளுமன்ற கூட்டமைப்பு
**<u>c. ராஜ்யசபையில் மட்டும்</u>** d. லோக்சபையில் மட்டும்

19. பொருத்துக

A. ஷரத்து 14-18 - 1.அரசியல் நிவாரணம் பெறும் உரிமை
B. ஷரத்து 19-22 - 2. சுரண்டலுக்கு எதிரான உரிமை
C. ஷரத்து 23-24 - 3. சுதந்திர உரிமை
D. ஷரத்து 32 - 4. சமத்துவ உரிமை

| | A | B | C | D |
|---|---|---|---|---|
| **<u>a</u>** | **<u>4</u>** | **<u>3</u>** | **<u>2</u>** | **<u>1</u>** |
| b | 1 | 2 | 3 | 4 |
| c | 3 | 1 | 4 | 2 |
| d | 2 | 4 | 1 | 3 |

20. லோக்சபையின் சபாநாயகர் தனது ராஜினாமா கழகத்தை யாரிடம் சமர்ப்பிப்பார்?

a. குடியரசுத்தலைவர் b. துணை குடியரசுத்தலைவர் **<u>c. துணை சபாநாயகர்</u>** d. தலைமை நீதிபதி

## தமிழ்

1. அகழ்வாரைத் தாங்கும் நிலம்போலத் தம்மை
இகழ்வார்ப் பொறுத்தல் தலை
**a. உவமையணி** b. சொற்பொருள்பின்வருநிலையணி
c. ஏகதேச உருவக அணி d. எடுத்துக்காட்டு உவமையணி

2. செல்வத்துள் செல்வம் செவிச்செல்வம் அச்செல்வம்
செல்வத்துள் எல்லாந் தலை.
a. உவமையணி b. எடுத்துக்காட்டு உவமையணி
**c. சொற்பொருள் பின்வருநிலையணி** d. ஏகதேச உருவக அணி

3. குணம்நாடிக் குற்றமும் நாடி அவற்றுள்
மிகை நாடி மிக்க கொளல்
a. உவமையணி **b. சொற்பொருள்பின்வருநிலையணி**
c. எடுத்துக்காட்டு உவமையணி d. ஏகதேச உருவக அணி

4. பெருமைக்கும் ஏனைச் சிறுமைக்கும் தத்தம்
கருமமே கட்டளைக் கல்
a. உவமையணி b. சொற்பொருள்பின்வருநிலையணி
c. எடுத்துக்காட்டு உவமையணி **d. ஏகதேச உருவக அணி**

5. சலத்தால் பொருள்செய்தே மார்த்தல் பசுமண்
கலத்துநீர் பெய்திரீஇ யற்று.
a. எடுத்துக்காட்டு உவமையணி b. சொற்பொருள்பின்வருநிலையணி
**c. உவமையணி** d. ஏகதேச உருவக அணி

6. பெருமைக்கும் ஏனைச் சிறுமைக்கும் தத்தம்
கருமமே கட்டளைக் கல் - இக்குறட்பாவில் பயின்று வரும் அணி எது?
a. சொல்பின்வருநிலையணி b. பொருள் பின்வருநிலையணி
**c. ஏகதேச உருவக அணி (ஒரு புடை உருவக அணி)** d. உவமையணி

---

## ஐ.நா பற்றிய தகவல்கள்

- ஐ.நா.சபை சாசனம் கையெழுத்து ஆன ஆண்டு - 26 ஜுன், 1945
- ஐ.நா.சபை சாசனம் கையெழுத்து ஆன மாநாடு - சான்பிரான்சிஸ்கோ
- ஐ.நா.சபை முறையாக தோற்றுவிக்கப்பட்ட ஆண்டு 24 அக்டோபர், 1945
- ஐ.நா.சபை உறுப்பு நாடுகள் - 193
- ஐ.நா.வில் கடைசியாக சேர்ந்த நாடு - தெற்கு சூடான்
- ஐ.நா.தலைமையகம் - நியூயார்க்
- ஐ.நா-வின் முக்கிய அங்கங்கள் - 6
1. பொது சபை, 2. பாதுகாப்பு சபை, 3. தர்மகர்த்தா சபை, 4. பொருளாதார மற்றும் சமூக மன்றம், 5. பன்னாட்டு நீதிமன்றம், 6. செயலகம்
- ஐ.நா.வின்நிரந்தர உறுப்பு நாடுகள் - 5. 1. அமெரிக்கா, 2. ரஷ்யா, 3. இங்கிலாந்து, 4. பிரான்ஸ், 5. சீனா
- ஐ.நா-வின் தற்காலிக உறுப்பு நாடுகள் - 10
- பொருளாதார மற்றும் சமூக மன்றத்தில் உறுப்பினர்கள் - 54
- பொருளாதார மற்றும் சமூக மன்றத்தில் உறுப்பினர்களின் பதவிக்காலம் - 9 ஆண்டுகள்
- மூன்றில் ஒரு பங்கு மூன்றாண்டிற்கு ஒருமுறை பதவி விலகுவர்
- பன்னாட்டு நீதிமன்றம் அமைந்துள்ள இடம் - திஹேக் (நெதர்லாந்து)
- பன்னாட்டு நீதிமன்றத்தில் உள்ள நீதிபதிகள் - 15
- ஐ.நா.வின் ஆட்சி மொழிகள் - 6, (ஆங்கிலம், பிரெஞ்சு, ரஷ்யன், ஸ்பானிஷ், அரபிக்,சைனீஸ்)
- ஐ.நா.நூலகம் - நியூயார்க்
- ஐ.நா.பல்கலைக்கழகம் - டோக்கியோ
- ஐ.நா.வின் முதல் பொதுச்செயலாளர் - டிரைக்விேளி (நார்வே)
- ஐ.நா.சின்னம் - ஆலிவ் கிளை
- ஐ.நா.உலக மனித உரிமை பிரகடம் செய்த ஆண்டு - 10 டிசம்பர், 1948
- ஐ.நா.வில் இந்தியா சேர்ந்த ஆண்டு - 30 அக்டோபர், 1945
- ஐ.நா.நுழைவாயில் எழுதப்பட்ட வரிகள் - யாதும் ஊரே, யாவரும் கேளிர்

# அறிவியல்

## தாதுக்களின் வகைகள்

| ஆக்சைடு தாது | கார்பனேட் தாது | ஹேலைடு தாது | சல்பைடு தாது |
|---|---|---|---|
| பாக்சைட் ($Al_2O_3.2H_2O$) | மார்பிள் ($CaCO_3$) | கிரையோலைட் ($Na_3AlF_6$) | கலீனா (PbS) |
| குப்ரைட் ($CU_2O$) | மாக்னசைட் ($MgCO_3$) | ஃப்ளுர்ஸ்பார் ($CaF_2$) | இரும்பு பைரைட் ($FeS_2$) |
| ஹேமடைட் ($Fe_2O_3$) | சிட்ரைட் ($FeCO_3$) | பாறைஉப்பு (NaCl) | ஜிங்க் ப்ளன்ட் (ZnS) |

| பொதுப்பெயர் | IUPAC பெயர் | மூலக்கூறு வாய்ப்பாடு |
|---|---|---|
| நீல விட்ரியால் (மயில் துத்தம்) | காப்பர் (II) சல்பேட் பென்டாஹைட்ரேட் | $CUSO_4.5H_2O$ |
| எப்சம் உப்பு | மெக்னீசியம் சல்பேட் ஹெப்டாஹைட்ரேட் | $MgSO_4.7H_2O$ |
| ஜிப்சம் | கால்சியம் சல்பேட் டைஹைட்ரேட் | $CaSO_4.2H_2O$ |
| பச்சை விட்ரியால் | இரும்பு (II) சல்பேட் ஹெப்டாஹைட்ரேட் | $FeSO_4.7H_2O$ |
| வெள்ளை விட்ரியால் | சிங் சல்பேட் ஹெப்டாஹைட்ரேட் | $ZnSO_4.7H_2O$ |


| வ. எண். | பொதுவான அமிலங்கள் | pH | பொதுவான காரங்கள் | |
|---|---|---|---|---|
| 1. | HCL (4%) | 0 | இரத்த பிளாஸ்மா | 7.4 |
| 2. | வயிற்றில் (இரைப்பை) உள்ள அமிலம் | 1 | முட்டை வெள்ளைக்கரு | 8 |
| 3. | எலுமிச்சை சாறு | 2 | கடல் நீர் | 8 |
| 4. | வினிகர் (அசிட்டிக் அமிலம்) | 3 | சமையல் சோடா | 9 |
| 5. | ஆரஞ்சு பழம் | 3.5 | அமில நீக்கி | 10 |
| 6. | சோடாநீர், திராட்சை | 4 | அம்மோனியா நீர் | 11 |
| 7. | புளித்த பால் | 4.5 | சுண்ணாம்பு நீர் | 12 |
| 8. | தூய பால் | 5 | வடிகால் சுத்தமாக்கும் பொருள் | 13 |
| 9. | மனிதனின் உமிழ்நீர் | 6-8 | எரிசோடா (4% NaOH) | 14 |
| 10. | தூய நீர் | 7 | மெக்னீசியா பால்மம் | 10 |
| 11. | தக்காளிச்சாறு | 4.2 | | |
| 12. | காஃபி | 5.6 | | |

## அறிவியல் (உடலியல்) - நினைவில் கொள்க ...

- ✦ ஆளுமை ஹார்மோன் - **தைராய்டு**
- ✦ தைராய்டு சுரப்பியில் சுரக்கும் ஹார்மோன்கள் - **ட்ரைஅயோடோதைரோனின் (T3), டெட்ராஅயோடோ தைரோனின் (T4) அல்லது தைராக்ஸின்**
- ✦ தைராக்ஸின் ஹார்மோனை படிக நிலையில் பிரித்தவர் - **எட்வர்டு C.கெண்டல்**
- ✦ தைராக்ஸின் ஹார்மோனின் மூலக்கூறு அமைப்பைக் கண்டறிந்தவர்கள் - **சார்லஸ் ஹாரிங்டன், ஜார்ஜ் பார்ஜர்**
- ✦ ஒவ்வொரு நாளும் தைராக்ஸின் சுரக்க தேவையான அயோடின் - **120μg**
- ✦ தலைமை சுரப்பி - **பிட்யூட்டரி**
- ✦ நாளமில்லாச் சுரப்பி மண்டலத்தின் தந்தை - **தாமஸ் அடிசன்**
- ✦ ஹார்மோன் என்ற முதன் முதலில் அறிமுகப்படுத்தியவர்கள் - **W.H.பேய்லிஸ், E.H.ஸ்டார்லிங்**
- ✦ முதன்முதலில் கண்டறியப்பட்ட ஹார்மோன் - **செக்ரிடின்**
- ✦ மனித இன்சுலின் ஹார்மோன் கண்டறிந்தவர்கள் - **பான்டிங், சார்லஸ் பெஸ்ட், மெக்லாட்**
- ✦ முதன்முதலில் நீரிழிவு நோயைக் குணப்படுத்த இன்சுலின் பயன்படுத்தப்பட்ட நாள் - **ஜனவரி 11, 1922**
- ✦ லாங்கர்ஹான் திட்டு - **ஆல்பா செல்கள் (குளுக்கோகான்), பீட்டா செல்கள் (இன்சுலின்)**
- ✦ பாலியூரியா - **அடிக்கடி சிறுநீர் கழித்தல்,** பாலிடிப்சியா - **அடிக்கடி தாகம் எடுத்தல்,** பாலிபேஜியா - **அடிக்கடி பசி எடுத்தல்**
- ✦ அவசரகால ஹார்மோன் - **அட்ரினலின்**
- ✦ உயிர்காக்கும் ஹார்மோன் - **கார்ட்டிசோல் ஹார்மோன்**
- ✦ ஆண் இனப்பெருக்க ஹார்மோன் - **டெஸ்டோஸ்டீரான்**
- ✦ பெண் இனப்பெருக்க ஹார்மோன் - **ஈஸ்ட்ரோஜன், புரோஜெஸ்டிரான்**
- ✦ வாந்தி எடுத்தலைக் கட்டுப்படுத்தும் மையம் - **முகுளம்**
- ✦ EEG என்பது மூளையில் உண்டாகக்கூடிய மின்அதிர்வுகளைப் பதிவு செய்யும் கருவி
- ✦ **மனித மூளையின் 60% பகுதி கொழுப்பாலானது.**
- ✦ உடலின் வெப்பநிலையை ஒழுங்குப்படுத்தும் மையம் - **ஹைப்போதாலமஸ்**
- ✦ நாளமில்லா சுரப்பியாகவும், நாளமுள்ள சுரப்பியாகவும் செயல்படுவது ………………
- ✦ LH ஐ சுரப்பது ………………………


## திறனறிவு

1. '?' குறியிட்ட இடத்தில் வரும், எண்ணைக் காண்க?




a) **41** b) 35 c) 30 d) 28

2. விடுபட்ட எண்ணைக் காண்க?




**a) 12** b) 18 c) 16 d) 24

3. A மற்றும் B ஒரு வேலையை 10 நாட்களிலும், B மற்றும் C அதே வேலையை 15 நாட்களிலும், C மற்றும் A அதே வேலையை 18 நாட்களிலும் முடிப்பர் எனில், B தனியே அவ்வேலையை எவ்வளவு நாட்களில் முடிப்பார்?

a) 30 நாட்கள் b) 20 நாட்கள் c) 12 நாட்கள் **d) 18 நாட்கள்**

4. LABOUR என்ற வார்த்தையை KBAPTS என குறியீட்டில் எழுதினால் CANDID என்ற வார்த்தையை எவ்வாறு குறியீட்டில் எழுதலாம்?

a) DBOEJE b) BBMCHC c) DZOCJC **d) BBMEHE**

5. ஒரு வட்டத்தின் ஆரம் 25% அதிகரிக்கப்பட்டால் பரப்பு அதிகரிக்கும் சதவீதம்?

a) 50 % b) 25% **c) 56.25%** d) 46.25%

6. 28 லி கலவையில் பாலும், நீரும் 5 : 2 என்ற விகிதத்தில் உள்ளது. அக்கலவையுடன் 2 லி நீர் சேர்த்தால், பால் மற்றும் நீரின் புதிய விகிதம்?

a) **2 : 1** b) 1 : 2 c) 2 : 3 d) 1 : 3

7. A, B, C மூவரும் சேர்ந்து ஒரு வேலையை 4 நாட்களில் முடிப்பர். A தனியே 12 நாட்களிலும் B தனியே 18 நாட்களிலும் அவ்வேலையை முடித்தால் C தனியே அவ்வேலையை எவ்வளவு நாட்களில் முடிப்பார்?

a) 10 நாட்கள் b) 12 நாட்கள் **c) 9 நாட்கள்** d) 18 நாட்கள்

8. ரூ. 4,000 ஆனது 4 ஆண்டுகளில் ரூ. 5,000 ஆகிறது எனில் கணக்கிடப்பட்ட தனிவட்டி விகிதம் யாது ?

a) **$6^{1/4}$%** b) 6% c) $5^{1/2}$% d) $6^{3/4}$%

9. 2 : 3 : 5 என்ற விகிதத்தில் உள்ள மூன்று எண்களின் வர்க்கங்களின் கூடுதல் 608 எனில் அவ்வெண்கள் முறையே?

a) 6, 16, 10 b) **8, 12, 20** c) 12, 8, 20 d) 20, 8, 12

10. விடுபட்ட எழுத்தைக் காண்

C G L R?

a) W b) T c) V **d) Y**

11. A-யும் B-யும் சேர்ந்து ஒரு வேலையை 6 நாட்களில் முடிப்பர். B மட்டும் தனியாக அவ்வேலையை 15 நாட்களில் முடித்தால், A தனியாக அவ்வேலையை முடிக்க எடுத்துக் கொள்ளும் நாட்கள் எவ்வளவு?

a) **10 நாட்கள்** b) 9 நாட்கள் c) 7 நாட்கள் d) 20 நாட்கள்

12. 16, 13, 17, 12, 18, 11, 19, 10, …………… என்ற தொடரில் அடுத்த உறுப்பு?

a) 9 b) 14 c) 13 d) **20**

13. 5 + 11 + 17 + …… + 95 =?

a) 200 b) 400 c) 600 d) **800**

14. பின்ம் தொடரில் அடுத்து வருவது DE, HI, NO, .... ?

a) VW **b) TU** c) ST d) RS

## சைவம், வைணவம் - (EO - Exam)

- சைவாகமங்களில் சிவனுக்கு எத்தனை குணங்கள் - **8**
- சைவத்தில் மும்மலத்தாலும் கட்டுற்று இருக்கும் உயிர்கள் - **சகலா** என்று அழைப்பர்
- ஸ்ரீ வைணவ சம்பிரதாயத்தை நிறுவியவர் - **நாதமுனி**
- விஷ்ணுவின் வாகனம் - **கருடன்**
- விஷ்ணு வெள்ளை குதிரையில் வருகின்ற அவதாரம் - **கல்கி**
- மாவீரன் அலெக்சாண்டருடன் சம்பந்தப்பட்ட இந்து பண்டிகை - **ரக்ஷாபந்தன்**
- நம்பியாண்டார் நம்பியின் மறுபெயர் - **பக்தபால பக்தன்**
- 'இவ்வனைத்தும் ஆத்மன்' என்று கூறும் உபநிடதம் - **கான்டொயா**
- சால் மரத்தடியில் அமர்ந்து தவமியற்றி ஞானம் அடையப் பெற்ற மகாபுருஷர் - **மகாவீர்**
- வேதங்கள் குறிப்பிடாத கடவுள் - **அக்னி**
- உபநிடதங்களின் போதகங்களை - **வோதோபனிஷத்** எனவும் அழைக்கலாம்
- இந்து மதப்படி இறப்பு கடவுளான யமன் தன் வாகனமாக வைத்திருக்கிற மிருகம் - **எருமை**
- உபநிடதங்கள், பிராமணங்கள் மற்றும் வேதங்கள் ஆகியவை மூன்று ஞான நூல்களாக கருதப்படுவது : **வெளிப்படுத்தப்பட்ட உரை நூல்**
- சாங்கியம் ஒப்புக் கொள்வது - **ஜீவன் முக்தி, விதேக முக்தி**
- இந்து மதத்தின்படி குழந்தைப் பருவ சடங்குகளாவன : **ஜாதகாரம்ப, நாமகரண, அன்னபிரசன்ன, வித்யாரம்ப**
- உத்தாலகருக்கும் ஸ்வேதகேதுற்கும் இடையே உள உரையாடல் இடம் பெறுவது - **சாந்தோக்கிய உபநிடதம்**
- புருஷ சுக்கத்தில் கூறப்பட்டுள்ளது - **வேதஞானிகள் பிரபஞ்சத்திற்கு பின்னால் இருக்கின்ற படைப்பாற்றலைக் கண்டுபிடிக்கும் முயற்சி**
- 'உபநிஷத்' என்ற சொல்லில் உள்ள - 'உப', 'நி', 'ஷத்' என்ற சொற்றொடர்களின் வேர்ப்பொருள் - **'உப' என்பதற்கு 'அருகில்' என்றும், 'நி' என்பதற்கு 'அருகில்' என்றும், 'ஷத்' என்பது 'பக்தியோடு' என்றும் பொருள்படும்.**
- சாகயாவின்படி, புருடன் - **சுத்த உணர்வு**
- வேதத்தில் கடவுள் மேல் உள்ள பக்தியையும் அவரது புகழையும் எடுத்துக்காட்ட "ஹீனோதியிஸம்" என்ற வார்த்தையை கொடுத்தவர் - **மாக்ஸ் முல்லர்**

## <u>நுகர்வோர் பாதுகாப்பு (Consumer Protection)</u>

1. சரியான கூற்று எது?
   1. மத்திய அரசு நுகர்வோர் பாதுகாப்பு சட்டத்தை இயற்றிய ஆண்டு 1986.
   2. நுகர்வோர் பாதுகாப்பு சட்டம் அமலுக்கு வந்த நாள் 15.04.1987
   3. நுகர்வோர் பாதுகாப்பு சட்டம் திருத்தப்பட்ட ஆண்டு 1993
   4. நுகர்வோர் பாதுகாப்பு சட்டம் சுருக்கமாக "கோப்ரா" (COPRA) என்றழைக்கப்படுகிறது
   a) 1, 2, 3 b) 2, 3, 4 c) 1, 3, 4 **<u>d) அனைத்தும்</u>**

2. 'நுகர்வோரியல்' எனும் சொல் தோன்றிய ஆண்டு?
   **<u>a) 1960</u>** b) 1957 c) 1954 d) 1958

3. நுகர்வோர் இயக்கத்தின் தந்தை?
   a) மகாத்மா காந்தி b) கென்னடி **<u>c) ரால்ப் நேடர்</u>** d) நேரு

4. பொருள்கள் விற்பனைச் சட்டம் இயற்றப்பட்ட ஆண்டு?
   a) 1962 b) 1972 **<u>c) 1982</u>** d) 1985

5. "நுகர்வோர் பாதுகாப்பு தினம்"?
   a) ஆகஸ்ட் 15 b) ஏப்ரல் 15 **<u>c) மார்ச் 15</u>** d) செப்டம்பர் 15

6. ஐக்கிய நாடுகள் அவையின் பொதுசபை நுகர்வோர் பாதுகாப்பு வழிகாட்டும் நெறிமுறைகள் குறித்து தீர்மானம் இயற்றிய ஆண்டு?
   **<u>a) 1985</u>** b) 1958 c) 1986 d) 1988

7. நுகர்வோர் சங்கங்களின் சர்வதேச அமைப்பு (IOCU) முதன் முதலில் நிறுவப்பட்ட ஆண்டு?
   **<u>a) 1960</u>** b) 1965 c) 1967 d) 1987

8. நுகர்வோர் பாதுகாப்புச் சட்டம் 1986 நுகர்வோருக்கு தீர்வு வழங்க ............ அடுக்கு தீர்வு மன்றத்தை ஏற்படுத்த வகை செய்துள்ளது ?
   **<u>a) 3</u>** b) 2 c) 4 d) 5

9. மாவட்ட நுகர்வோர் பாதுகாப்பு மன்றத்தின் தலைவர்?
   **<u>a) மாவட்ட நீதிபதி</u>** b) உயர்நீதிமன்ற நீதிபதி
   c) உச்சநீதிமன்ற நீதிபதி d) எதுவும் இல்லை

10. மாநில நுகர்வோர் பாதுகாப்பு சபையின் தலைவர்?
    a) நிதிமந்திரி b) முதல்வர் **<u>c) உயர்நீதிமன்ற நீதிபதி</u>** d) எதுவும் இல்லை

11. தேசிய நுகர்வோர் மறுவாழ்வு குழுவின் தலைவர்?
    a) பிரதமர் b) குடியரசுத்தலைவர்
    **<u>c) உச்சநீதிமன்றத்தின் சேவை அல்லது ஓய்வு பெற்ற நீதிபதி</u>** d) எதுவும் இல்லை

12. தேசிய நுகர்வோர் குறை தீர்ப்பாணையம் வழங்கிய தீர்ப்பை எதிர்த்து ............... நாட்களுக்குள் உச்சநீதிமன்றத்தின் மேல் குறையீடு செய்யலாம்?
    a) 15 **<u>b) 30</u>** c) 90 d) 120

13. சரியான கூற்று எது?
    நுகர்வோர் மன்றத்தின் நன்னடத்தை அதிகார எல்லை
    1. மாவட்ட நுகர்வோர் மன்றம் - ரூ. 20 லட்சம் வரை
    2. மாநில நுகர்வோர் மன்றம் - ரூ. 20 லட்சம் முதல் 1 கோடி மதிப்பு வரை
    3. தேசிய ஆணையம் - ரூ. 1 கோடிக்கு மேல்
    a) 1, 3 b) 2, 3 **<u>c) 1, 2, 3</u>** d) எதுவும் இல்லை

14. இந்தியாவின் முதல் தனியார் நிறுவனம்?
    a) BALCO b) IPCL c) HZL **<u>d) இந்தியன் ஸ்கூட்டர் லிமிடெட்</u>**

15. புதிய பொருளாதார கொள்கை அறிமுகப்படுத்தப்பட்ட ஆண்டு?
    a) 1980 **<u>b) 1991</u>** c) 2013 d) 2015